சுற்றறிக்கை இல: 03/01

எனது இல: என்ஈபி/சிஒ/பொது-2
கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம், (வகிமா)
திருக்கோணமலை.

09.08.2001

சகல கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கட்கும்.

<u>கூட்டுறவுச் சங்கங்கள் ஆதனங்களை உடைமையாக்கல்</u>

கூட்டுறவுச் சங்கங்கள் ஆதனங்களை உடைமையாக்குதல் தொடர்பில் எம்மால் வெளியிடப்பட்ட 11.11.1997ந் திகதிய 8/97 இலக்க சுற்றுநிருபத்தின்பாலும், 24.01.2001ந் திகதிய 01/01 இலக்க சுற்றுநிருபத்தின்பாலும் தங்கள் கவனம் இத்தால் ஈர்க்கப்படுகின்றது.

அண்மைக் காலங்களில் பல கூட்டுறவுச் சங்கங்கள் வடக்கின் மீள்குடியேற்ற புனர்வாழ்வு அதிகார சபை, கிழக்கு மாகாண புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு, அரசசார்பற்ற நிறுவனங்கள், சங்கத்தின் அங்கத்தவர்கள், அங்கத்தவரல்லாதோர், அயற் சங்கங்கள் போன்றவர்களிடமிருந்து புனரமைப்பு என்ற திட்டத்தின்கீழ் காணிகள், கட்டிடங்கள், தளபாடங்கள், வாகனங்கள், இயந்திரங்கள், பொறித் தொகுதிகள் என்பனவற்றை தம் உடைமையாக்குகின்றன. இவ்வுடமையாக்கல் பணமாகப் பெற்று சொத்துக்களைக் கொள்வனவு செய்தல், நன்கொடையாகப் பெறுதல், கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்களைப் பொறுப்பேற்றல், சங்கங்களுக்குச் சொந்தமான காணிகளில் கட்டிடங்கள் கட்ட அனுமதித்த பின் பொறுப்பேற்றல் என்ற வடிவங்களில் அமைந்துள்ளன.

இந் நடவடிக்கைகளில் மேற்குறித்த சுற்றுநிருபங்களில் வலியுறுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பில் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 33 ஆம் பிரிவின்மீதும், அதே சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டு வெளியிடப்பட்ட 1973 ஆம் ஆண்டின் கூட்டுறவுச் சங்க விதிகளின் 48(1)ஆம், (11) ஆம் பிரிவுகளின்மீதும் தங்கள் கவனத்தைத் திரும்பவும் ஈர்க்க விரும்புகின்றேன்.

பொதுச் சபையின் முன்னனுமதியுடனும், எழுத்திலான பதிவாளரின் முன்னனுமதியுடனும் மட்டுமே ஆதனங்கள் சங்கத்தின் உடைமையாக்கப்பட வேண்டும் என்பதை கவனத்திற்கொள்வதுடன், அதற்கேற்ப நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அறியத் தருகின்றேன்.

ஆ. சுப்பிரமணியசர்மா
கூட்டுறவுச் அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் (வகிமா)

பிரதி: கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,

........................... - தகவலின் பொருட்டும்,
எதிர்கால நடவடிக்கை-களின் பொருட்டும்